**தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் - 2014**

---

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2007 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 13(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு

நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்
----------------------------

### 2.1 அபிப்பிராயம்
---------------------

நிதிக்கூற்றுக்களானவை தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்(SLPSAS)

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் பெறுமதி பூச்சியமான எனினும் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்ற ரூபா 17,059,061 ஆன நிலையான சொத்துக்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் கிரயத்தில் காண்பிக்கப்பட்டுள்ள எனினும் தற்போதய சந்தைப் பெறுமதி, கூடிய பெறுமதியொன்றைக் காட்டுகின்ற ரூபா 10,079,996 ஆன காணி மற்றும் கட்டிடங்கள் என்பவற்றின் நியாயமான பெறுமதியை காண்பிக்கும் வகையில் மீள்கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் 2.10.2 ஆம் இலக்க குறிப்பின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் நிறுவகத்தின் மூலதன மானியங்கள் தொடர்பாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டுகளின் சீராக்கமாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 15,608,863 தொகை மூலம் முன்னைய ஆண்டுகளின் நிதி விளைவுகளுக்கான தாக்கம் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி | மீளாய்வாண்டிற்காக வரைவு ஆண்டறிக்கை |

| | | |
|---|---|---|
| | அதிகாரச்சட்டத்தின் 14(11)(1) ஆம் பிரிவு | தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2010 திசெம்பர் 31 ஆம் திகதிய 26/2010 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட 08 பேரை ஆட்சேர்ப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2013 செப்தெம்பர் 01 ஆம் திகதிய Seo/2013/07 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | உழைக்கும் போது செலுத்தும் வரி கணிப்பிடுகையில் விடுமுறை தினக் கொடுப்பனவு மற்றும் மேலதிக எரிபொருள் படிகள் என்பன கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவு | (i) முழுமையான இணைந்த படிகளைப் பெற்றுக்கொள்வதற்காக 12 மணித்தியாலம் மேவுகை செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறல்லாத 04 சந்தர்ப்பங்களில் முழுமையான இணைந்த படிகள் செலுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(ii) கடமைப் பயணங்களை மேற்கொள்ளும் உத்தியோகத்தரொருவருக்கு தனது சேவை நிலையத்திலிருந்து வெளியே இருக்கும் காலப்பகுதிக்காக இடைநேர் மற்றும் தங்குமிட தொடர்பான செலவினங்களை மீள் நிரப்புவதற்காக உரிய இணைந்த படியொன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்த போதிலும், அவ் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 14,355 ஆன இணைந்த படிகளைத் தீர்ப்பதற்காக கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (உ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றம் நிதிப் பிரமாணம் 507(2) | நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாக எழுதப்படாதிருந்ததுடன், நிலையான சொத்துக்கள் தொடர்பான கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.4 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

---

நிறுவகத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்திற்கு எரிபொருள் படிகள் 2008 யூலை 28 ஆம் திகதிய பீஈடீ/50 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 2011 பெப்ரவரி முதல் 2014 மார்ச் வரை 2011 பெப்ரவரி 09 ஆம் திகதிய 13/2008(iv)ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் குறித்த காலப்பகுதிக்காக ரூபா 989,140 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதனை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

---

**3.1 நிதி விளைவுகள்**

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 478,601 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 15,608,863 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 16,087,464 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் 03 கல்விச் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதாக படிகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், நிறுவகத்தின் அறிக்கையின் பிரகாரம் ஒரு கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) இணைப்பு உதவியாளர் (MA 3)III தரத்தில் 04 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக 2014 நவம்பர் மாதத்தில் 04 நாட்கள் (02 விடுமுறை தினங்கள் உட்பட) 440 அபேட்சகர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் 1:110 என்ற விகிதத்தில் நேர்முகப் பரீட்சைக்காக பங்குபெறச் செய்யப்பட்டிருந்த போதிலும், ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வெளிப்படையான மோசடிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்திற்காக செயல் நடைமுறைக்கோவையொன்றைத் தயாரிப்பதற்காக பணிப்பாளர் சபை உறுப்பினரொருவருக்கு ரூபா 45,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் தயாரிக்கப்பட்டிருந்த வரைவு செயல் நடைமுறைக்கோவைக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பாடநெறியொன்றிற்காக பௌத்த அலுவல்கள் அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 165,000 ஆன நிலுவைத்தொகையை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பணிப்பாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ வாகனம் மீளாய்வாண்டின் மார்ச் முதல் திசெம்பர் வரை ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த தூரத்தைப்

பரிசோதித்த போது உரிய எரிபொருள் படிகளை விஞ்சி ரூபா 93,824 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4.3 செயலாற்றல்

அரச உத்தியோகத்தர்களுக்காக இரண்டாவது மொழிப் பயிற்சி பாடநெறிகளின் செயன்முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ)

| அங்கீகரிக்கப்பட்ட வகுப்புக்களின் எண்ணிக்கை | எதிர்பார்த்த பங்குபற்றுகை | பூர்த்தி செய்யப்பட்ட வகுப்புக்களின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் உள்ளவாறான எண்ணிக்கை | செயற்பாடற்ற வகுப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 368 | 16,146 | 214 | 8,005 | 188 |

(ஆ) 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது மொழிப் பயிற்சி பாடநெறிகளின் II மற்றும் III மட்ட வகுப்புக்கள் 2015 மார்ச் 15 ஆம் திகதி வரையிலும் கீழே காட்டப்பட்டுள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

| ஆண்டு | தமிழ் மொழி வகுப்புக்கள் | சிங்கள மொழி வகுப்புக்கள் |
|---|---|---|
| 2012 | 33 | - |
| 2013 | 279 | 38 |

(இ) அரச உத்தியோகத்தர்களுக்காக 12 நாள் வதிவிடமற்ற 10 பாடநெறிகளை நடாத்துவதற்காக ரூபா 1,400,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆண்டின் போது 35 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 6,650,465 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஒரு பாடநெறிக்கான செலவினம் மதிப்பிடப்பட்ட தொகையை விட ரூபா 50,000 ஆல் அதிகரித்திருந்தது.

(ஈ) மொழிச் சங்க நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 150 மணித்தியால பேச்சு பாடநெறிகளின் செயன்முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளதுடன், வகுப்புக்களை நடாத்துதல் மற்றும் சமூகமளித்தல் என்பன பலவீனமான நிலைமையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

| அங்கீகரிக்கப்பட்ட வகுப்புக்களின் எண்ணிக்கை | எதிர்பார்த்த பங்குபற்றுகை | பூர்த்தி செய்யப்பட்ட வகுப்புக்களின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் உள்ளவாறான எண்ணிக்கை |
|---|---|---|---|
| 364 | 13,920 | 180 | 5,400 |

(உ) மொழிச் சங்கத்திற்காக இறுதியாக 2013 ஆம் ஆண்டில் பரீட்சை நடாத்தப்பட்டிருந்ததுடன், அதில் சித்தியெய்திய எண்ணிக்கையை விட சித்தியடையாத எண்ணிக்கை அதிகரித்திருந்தது. வகுப்புக்கள் நிறைவு பெற்று நீண்டகாலத்தின் பின்னரே பரீட்சையை நடாத்துதல் மற்றும் குறிப்பான விடயப் பரப்பொன்றை பின்பற்றாமை என்பன பரீட்சையில் சித்தியடையாமைக்கான காரணங்கள் என தலைவர் அறிக்கையிட்டிருந்தார்.

(ஊ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு செயற்பாடுகளினதும் செயன்முன்னேற்றத்தைப் பரீட்சிக்கக் கூடிய வகையில் செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) வாகனப் பயன்பாடு

(இ) மொழி வகுப்புக்களை நடாத்துதல்

(ஈ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம்